**சுருக்கம்**

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டம் ரூ. 550 கோடியில் 2008–2009 முதல் 2012–2013 வரையிலான ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2011–2012 ஆம் ஆண்டு பெருந்திட்டத்தில் மாறுதல் – 2011–2012 ஆம் ஆண்டில் 50 புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் செயல்படுத்த ரூ. 1151.81 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (ஆர்.2) துறை**

அரசாணை (நிலை) எண்.222 நாள்: 01.11.2011

ஐப்பசி–15, திருவள்ளுவராண்டு 2042

**படிக்க:**

1. அரசாணை(நிலை) எண். 198, பொதுப்பணி(ஆர்.2)துறை, நாள் 10.6.2008.
2. அரசாணை (நிலை) எண்.60, பொதுப்பணித்துறை, நாள் 28.2.2011.

**மீண்டும் படிக்க:**

3. தலைமைப் பொறியாளர், (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5 கடித எண்எப்.1/ARS/5445/2010, நாள் 1.2.2011
4. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, கடித எண்.எஸ்7(2)/55310/2008, நாள் 2.2.2011.

*****

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்ட மன்ற பேரவையில் 26.8.2011 அன்று பொதுப்பணித்துறை மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்ட தடுப்பு அணைகள், கசிவுநீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் போன்ற 102 கட்டுமானங்களை ரூபாய் 49.00 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தவும் நிலத்தடி நீர் இருப்பை மேம்பாடு செய்யவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே

தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்ட **102** கட்டுமானங்களை ரூ. **49.00** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

**3.** இதனடிப்படையில், **2011–2012** நடப்பு நிதியாண்டில் ரூ.**1151.81** இலட்சங்கள் மதிப்பீட்டிலான **50** புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மதிப்பீடுகளை அரசாணை (நிலை) எண்.**198**, பொதுப்பணித்துறை, நாள் **10.6.2008**ல் பத்தி **4 (II)**ல் குறிப்பிட்டுள்ளவாறு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது **2009–10** மற்றும் **2010–11**ற்கான செயல்திட்டத்திற்கு (Action Plan) உரிய மாற்றங்கள் தேவைப்படின், அதற்கேற்றார்போல் மாற்றியமைக்க தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால், பெருந்திட்டத்தில் சில மாறுதல்கள் செய்து மதிப்பீடுகளை அனுப்பி அரசின் ஒப்புதல் கோரியுள்ளார். முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை இக்கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**4.** நடப்பு நிதியாண்டில் செயற்கை முறையில் நிலத்தடிநீர் செறிவூட்ட ரூபாய் **1.00** கோடிக்கு உட்பட்ட ரூ.**1151.81** இலட்சங்கள் (ரூபாய் பதினொன்று கோடியே ஐம்பத்தி ஒரு இலட்சத்து எண்பத்து ஒன்று ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டிலான **50** புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் செயல்படுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் அனுப்பியுள்ள மதிப்பீட்டுகளுடன் கூடிய கருத்துருவிற்கு ஒப்புதல் கோரி அரசுக்கு அனுப்பியுள்ளதை இணைப்பில் உள்ளபடி அதனதன்படி பிரித்து செயல்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4–**ல் அனுமதிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: –

> ‘‘**4702–00.** சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு – **102.** நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II. மாநிலத்திட்டம் - JD. செயற்கை முறையில் நிலத்தடி நீரினை சேகரிப்பதற்கான கட்டமைப்புத் திட்டம் – **16.** பெரும்பணிகள் (த.தொ.கு.**4702–00–102–JD–1609**)’’

**6.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிக்கப்பட்ட பணிகளுக்கான செலவினம் ‘‘புது துணைப் பணி (New Instrument of Service)” குறித்ததாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி **(வ.செ.பொது–1)** த்துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி **(வ.செ.பொது–1)** த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை **2011–2012** ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி **(வ.செ.பொது–1 / பொ.ப.2)** த்துறைக்கு தவறாமல் அனுப்புமாறு தலைமைப்

பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும், எதிர்பாரா செலவினங்கள் (Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள் (Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள் (Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான செலவினத்தில் 2.5%-க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.47942/பொ.ப.II/2011, நாள் 3.10.2011–ல் பெறப்பட்ட இசைவோடு வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.599 (ஐநூற்று தொண்ணூற்று ஒன்பது).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்), தரமணி, சென்னை –113.
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர், விருதுநகர், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், பெரம்பலூர், புதுக்கோட்டை.
மாநில கணக்காயர், சென்னை–18/ பெயரில்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, சென்னை–25.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை–35.
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், வனத்துறை , சென்னை–6.
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்), சென்னை–9.
நகல்
நிதி (வ.செ.பொது. I மற்றும் II) / (பொ.ப.II) துறை / வேளாண்மை / சுற்றுச் சூழல்/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை –9
இ.கோ/உ.கோ.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**

# இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.222, பொதுப்பணித்துறை, நாள் 01.11.2011

| வ. எண் | மாவட்டம் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் | பெருந்திட்டத்தில் உள்ள குறிப்பு (இருப்பின்) |
|---|---|---|---|---|
| 1 | கடலூர் | கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சாத்திப்பட்டு கிராமத்தில் நாலோடையின் குறுக்கே நிலத்தடி நீர் செறிவு துளையுடன் கூடிய தடுப்பணை கட்டுதல் | 42.25 | 2010-2011 |
| 2 | கடலூர் | கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், கருப்பஞ்சாவடி கிராமத்தின் அருகில் வடக்கு ஓடையின் குறுக்கே நிலத்தடி நீர் செறிவு துளையுடன் கூடிய தடுப்பணை கட்டுதல் | 24.20 | 2010-2011 |
| 3 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், தீர்த்தக்கரை கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 12.76 | புதியதிட்டம் |
| 4 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், எ.ரெட்டியாபெட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் . | 18.32 | புதியதிட்டம் |
| 5 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், செவலூர் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 19.25 | புதியதிட்டம் |
| 6 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், பிள்ளையார்நத்தம் கிராமத்தில் ரங்கதீர்த்த ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 26.60 | புதியதிட்டம் |
| 7 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், நாச்சியார் கோவில் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 19.60 | புதியதிட்டம் |
| 8 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், சிங்கம்மாள்புரம் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 15.78 | புதியதிட்டம் |
| 9 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், விழுப்பனூர் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 15.84 | புதியதிட்டம் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், நத்தம்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 19.12 | புதியதிட்டம் |
| 11 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், வடக்கு சிங்கம்புனரி கிராமத்தில் உப்பார் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 26.14 | புதியதிட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சிங்கம்புனரி கிராமத்தில் மனப்பட்டி அருகில் பாலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 31.50 | புதியதிட்டம் |
| 13 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பாலையூர் கிராமத்தில் பாலையூர் ஏரியின் வழிந்தோடுதலின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 27.68 | புதியதிட்டம் |
| 14 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், ஜெயங்கொண்டான் கிராமத்தில் ஜெயங்கொண்டான் ஏரியின் வழிந்தோடுதலின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 20.84 | புதியதிட்டம் |
| 15 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், எஸ்.வி.மங்கலம் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 40.60 | புதியதிட்டம் |
| 16 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கருவேலங்குறிச்சி அருகே வடமாவளி கிராமத்தில் மணிமுத்தாறு குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 54.06 | புதியதிட்டம் |
| 17 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஸ்ரீரங்கநத்தம் கிராமத்தில் உப்பாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 51.15 | புதியதிட்டம் |
| 18 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சதுர்வேதமங்கலம் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 42.20 | புதியதிட்டம் |
| 19 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், மேலமனக்குடி கிராமத்தில் சாக்கவயல் ஏரியில் வழிந்தோடுதலின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 35.00 | புதியதிட்டம் |
| 20 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், நாட்டுச்சேரி கிராமத்தில் பாம்பாறின் குறுக்கே தடுப்பணைக் கட்டுதல் | 44.00 | புதியதிட்டம் |
| 21 | மதுரை | மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், புதூர் கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 12.00 | புதியதிட்டம் |
| 22 | மதுரை | மதுரை மாவட்டம் , வாடிப்பட்டி வட்டம், சத்திரவெள்ளாளப்பட்டி கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 15.00 | புதியதிட்டம் |
| 23 | மதுரை | மதுரை மாவட்டம் , உசிலம்பட்டி வட்டம், வடுகபட்டி கிராமத்தில் அசுவமாநதியின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 18.00 | புதியதிட்டம் |
| 24 | மதுரை | மதுரை மாவட்டம் , பேரையூர் வட்டம், வண்டாரி கிராமத்தில் கன்னிமார் ஊத்து ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 11.00 | புதியதிட்டம் |
| 25 | மதுரை | மதுரை மாவட்டம் , உசிலம்பட்டி வட்டம், வலையபட்டி கிராமத்தில் அஸ்வமாநதியின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 21.50 | புதியதிட்டம் |
| 26 | தேனி | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கதிர்நரசிங்கபுரம் கிராமத்தில் வரட்டாறு நாகலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 40.39 | புதியதிட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | தேனி | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கொலுஞ்சிபட்டி கிராமத்தில் வரட்டாறு நாகலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 33.50 | புதியதிட்டம் |
| 28 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், டி.கூடலூர் கிராமத்தில் கும்மாயம்பட்டி ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 25.80 | புதியதிட்டம் |
| 29 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுகல் வட்டம், ஆவிலிபட்டி கிராமத்தில் சந்தானவர்தினி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 37.65 | புதியதிட்டம் |
| 30 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், தென்னம்பட்டி கிராமத்தில் வரட்டாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 38.60 | புதியதிட்டம் |
| 31 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், பாடியூர் கிராமத்தில் கல்லாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 38.20 | புதியதிட்டம் |
| 32 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திணடுகல் வட்டம், கோணபட்டி கிராமத்தில் கருப்பு கோவில் பெரியாத்து ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 24.95 | புதியதிட்டம் |
| 33 | திருப்பூர் | திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னாபுரம் –II (தொப்பம்பட்டி) கிராமத்தின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 10.56 | 2010-2011 |
| 34 | திருப்பூர் | திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், நந்தவனம்பாளையம் (புது அய்யப்பநாயக்கன்பாளையம் ) கிராமத்தின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 9.90 | 2010-2011 |
| 35 | திருப்பூர் | திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மருதூர் கிராமத்தின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே நிலத்தடி நீர் செறிவுத் துளையுடன் கூடிய தடுப்பணை அமைத்தல் | 16.52 | 2010-2011 |
| 36 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், வடக்கு இலந்தைகுளம் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 9.00 | புதியதிட்டம் |
| 37 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம், ஒட்டபிடாரம் வட்டம், கச்சேரி தளவாய்புரம் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 12.00 | புதியதிட்டம் |
| 38 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், தலைகாட்டு புரம் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 11.00 | புதியதிட்டம் |
| 39 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டம், அருங்குளம் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 11.00 | புதியதிட்டம் |
| 40 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், அச்சம்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 8.15 | புதியதிட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 41 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பெருமாள்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 8.25 | புதியதிட்டம் |
| 42 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணக்குடி கிராமத்தில் ஹனுமாநதியின் குறுக்கே புல எண்.1351–ல் தடுப்பணை அமைத்தல் | 15.50 | புதியதிட்டம் |
| 43 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், தொண்டாமுத்தூர் கிராமத்தின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 9.36 | 2010-2011 |
| 44 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சூலக்கல் கிராமம் புல எண்.46ல் சூலக்கல் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 39.47 | 2010-2011 |
| 45 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், குனியமுத்தூர் கிராமம், செங்குத்துப்பள்ளத்தின் (ஓடை) குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 9.52 | 2010-2011 |
| 46 | பெரம்பலூர் | பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், நாரணமங்கலம் கிராமத்தில் உள்ள பெரிய ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 19.62 | புதியதிட்டம் |
| 47 | பெரம்பலூர் | பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், இருர் கிராமத்தில் உள்ள மல்லப்பிள்ளை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 16.29 | புதியதிட்டம் |
| 48 | பெரம்பலூர் | பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பில்லாங்குளம் கிராமத்தில் நூத்தப்பூர் வடக்கு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 24.50 | புதியதிட்டம் |
| 49 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், இச்சடி கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 9.57 | 2010-2011 |
| 50 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | 8.12 | 2010-2011 |
| | | **மொத்தம்** | **1151.81** | |

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

**/உண்மை நகல்/**

**பிரிவு அலுவலர்.**